OS 128/2024

வா.சா.1 ஆனந்தன் த/பெ கோவிந்தசாமி

நாள் 24.10.2025

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சொத்து வாங்குவதற்காக ரூ.1,35,000/- விலை பேசி ரூ.1,25,000/- கொடுத்தேன் மீதி ரூ.10,000/- செலுத்த வேண்டியிருந்தது அதற்குள் அவர்கள் நிறுத்திவிட்டார்கள். சொத்து விற்கப்போவதாக யார் என்னிடம் சொன்னது என்றால் அவர் பெயர் எனக்கு தெரியாது. எந்த அடிப்படையில் கிரைய விலை பேசப்பட்டது என்றால் அவர் மனைவி வந்து வட்டிக்கு பணம் கேட்டார் நான் சொத்து பேசி காசு கொடுத்தேன். வட்டிக்கு பணம் கொடுப்பதற்காக கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் சரிதான். கிரையப்பத்திரம் எழுதி கொடுக்கும்படி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை பணம் கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)